ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
தொலைபேசி : 044– 25670769
நிகரி : 25675849
இணையதளம் : www.tnrd.gov.in

**கடிதம் (1D) எண். 581, நாள். 6.10. 2009.**

அனுப்புநர்
திரு க.அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள். (சென்னை மாவட்டம் நீங்கலாக)
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
பேரூராட்சிகள் ஆணையர், சென்னை–108.
உறுப்பினர் – செயலாளர், மாநில திட்டக்குழு, சென்னை–5.
இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை, சென்னை–108.
அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, சென்னை–9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்ற பேரவைச் செயலகம், சென்னை–9.
நிர்வாக இயக்குநர், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம், சென்னை–2.

அய்யா/அம்மையீர்,

பொருள்: திட்டங்கள் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – பாதாள சாக்கடையில் ஏற்படும் அடைப்பு மற்றும் கழிவுப்படிவுகளை அகற்றும் பணிக்காக ஜெட்ராடிங் (Jet rodding) இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையினால் இயக்கப்படும் தூர்வாரும் (Hydraulically Operated Sewerage Machines) இயந்திரங்களை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து வாங்குவதற்கு சிறப்பு அனுமதி அளித்து ஆணையிடப்படுகிறது.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.61, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள் 16.07.2009.
2. அரசாணை (நிலை) எண்.90, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள் 11.08.2009.
3. நிர்வாக இயக்குநர், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் அவர்களின் நேர்முக கடித எண். CMWSSB/O&M/Desilt/MP-MLA/2009, நாள் 29.09.2009.
4. சென்னை மாநகராட்சி ஆணையர் கடித எண்.B.D.C.B6/3237/09, நாள் 29.09.2009.

*****

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரிய நிர்வாக இயக்குநர் பார்வை மூன்றில் உள்ள தனது நேர்முகக் கடிதத்தில், சென்னை மாநகரில் கழிவு நீர் அகற்றும் பணியில் மனிதர்களைப் பயன்படுத்துவதை தவிர்க்கும் பொருட்டு, அப்பணிகளை இயந்திரமயமாக்கி செயல்படுத்தவும், பராமரிப்பு பணிகளை செய்திடவும், பல்வேறு நடவடிக்கைகளை இவ்வாரியம் எடுத்துவருவதாகவும், இதற்காக ஜெட்ராடிங் இயந்திரங்களையும், ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற தூர்வாரும் இயந்திரங்களையும் (Hydraulically Operated desilting machines)பயன்படுத்தி கழிவுநீர் அகற்றும் முறையை பராமரித்து வருவதாகவும் ஜெட்ராடிங் இயந்திரங்கள் கழிவுநீர் செல்லும் பாதையில் ஏற்படும் அடைப்பை நீக்குவதற்கும், கழிவுநீர் பாதைகளை சுத்தம் செய்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளார். மேலும், சென்னை உயர்நீதிமன்றம் பிரிதொரு வழக்கில் அளித்த தீர்ப்பில் பாதாள சாக்கடை அடைப்பை சுத்தம் செய்யும் பணியில் மனிதர்களை (Entry of Human beings in Manholes) சில விதி விலக்கான நிகழ்வுகளைத் தவிர மற்ற எல்லாவகையிலும் பயன்படுத்துவதை தடை செய்யப்பட்டுள்ளதால் இயந்திரங்களை பயன்படுத்த வேண்டிய தேவை அதிகரித்துள்ளது என்பதால் ஜெட்ராடிங் இயந்திரங்கள் அதிகம் வாங்க வேண்டிய நிலை உள்ளது என்றும், தோராயமாக **85** முதல் **90** ஜெட்ராடிங் இயந்திரங்கள் தேவைப்படுகின்றன என்றும் தற்போது **45** ஜெட்ராடிங் இயந்திரங்கள் உள்ளது என்றும் **10** ஜெட்ராடிங் இயந்திரங்கள் வாங்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் எனவே, மேலும், **30 (85 – 55 = 30 )** புதிய ஜெட்ராடிங் இயந்திரங்கள் தேவைப்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளார். இதேபோல **2008**ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படும் தூர்வாரும் இயந்திரங்களை கொண்டு பாதாள சாக்கடைகளில் சேரும் கழிவுப் படிவுகளை அகற்ற பயன்படுத்தி வருவதாகவும், தற்போது அத்தகைய **44** இயந்திரங்கள் பயன்பாட்டில் உள்ளது என்றும், மேலும் **9** தூர்வாரும் இயந்திரங்கள் வாங்க முடிவு செய்து ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இத்தகைய தூர்வாரும் இயந்திரங்கள் மொத்தம் **89** தேவைப்படுகிறது என கணக்கிட்டிருப்பதாகவும், அதனால், மேலும் **36 (89–53= 36)** தூர்வாரும் இயந்திரங்கள் வாங்க வேண்டியது அவசியமாகிறது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் பாதாளசாக்கடை அடைப்பு நீக்குதல் மற்றும் கழிவுப்படிவுகளை அகற்ற தேவைப்படும் இந்த இயந்திரங்களை வாங்குவதற்கு சில சட்டமன்ற உறுப்பினர்கள்/பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து வழங்கிட விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் கூறியுள்ளார். **30** ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் **36** ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற தூர்வாரும் இயந்திரங்கள் கழிவுநீர் அகற்றும் முறையை பராமரிக்கும் பொருட்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய பயன்பாட்டிற்கு வாங்குவதற்கு சட்டமன்ற உறுப்பினர்/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து எடுத்துச் செய்திட ஆணை வெளியிடுமாறு அரசினை கோரியுள்ளார். பார்வை நான்கில் உள்ள தனது கடிதத்தில், சென்னை மாநகராட்சி ஆணையரும் இதனை பரிந்துரை செய்துள்ளார்.

**2.** சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய நிர்வாக இயக்குநரின் கோரிக்கையை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. அதன்படி, சென்னை உயர்நீதிமன்றம், துப்புரவு பணியாளர்கள் பாதாள சாக்கடையில் இறங்கி தூர்வாரும் பணியை செய்ய தடை செய்துள்ளதால் இயந்திரங்களை கொண்டு பாதாள சாக்கடை

அடைப்புகள் மற்றும் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது என்பதாலும் இது பாதாள சாக்கடை திட்டம் செயல்பாட்டில் உள்ள எல்லா இடங்களுக்கும் பொருந்தும் என்பதாலும் அப்பகுதிகளிலும், தூர்வாரும் பணிக்காக மேற்கண்ட இயந்திரங்கள் வாங்க வேண்டியது அவசியம் என அரசு கருதுகிறது. அதன்படி பாதாள சாக்கடைத்திட்டம் செயல்பாட்டில் உள்ள சென்னை பெருநகரம் மற்றும் தமிழ்நாட்டில் எந்தெந்த மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் தற்போது பாதாள சாக்கடை திட்டம் செயல்பாட்டில் உள்ளதோ அந்த மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் ஜெட்ராடிங் இயந்திரங்களையும், ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற தூர்வாரும் இயந்திரங்களையும் பயன்பாட்டிற்கு வாங்குவதற்கு இதனை ஒரு சிறப்பினமாகக் கருதி எடுத்துச்செய்திட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட வழிகாட்டு நெறிமுறைகளை தளர்த்தி அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

<u>நகல்:–</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், தலைமைச்செயலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
தலைமைச்செயலகம், சென்னை–9,
சட்டமன்ற பேரவைத் தலைவர், தமிழ்நாடு சட்டமன்ற பேரவைச் செயலகம், சென்னை–9.
தலைமைச்செயலாளரின் தனிச்செயலர், சென்னை 9.
அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
(அனைத்து அமைச்சர்களின் அலுவலகங்களுக்கும்)